நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம்
21 JUN 2002
மாநகராட்சி

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 07 வெள்ளிக்கிழமை (21.06.2002) தொலைபேசி 3378 ஒலி 184

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு



சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480

### அரசு - விடுதலைப்புலிகள்

# சமாதானப் பேச்சுக்கான அறிகுறி தென்படவில்லை

## அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் பேட்டி

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையின் நகர்வு ஆமை வேகத்தில் உள்ளது. இன்னும் ஒரு சில வாரங்களில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கக் கூடிய அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.**

எம்.ரி.வி தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அஸ்லிவில்ஸ் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆகிய இருவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள் எனினும் இது விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றி என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது. ஆயினும் புலிகள் சமாதானப் பேச்சவார்த்தையில் பங்கு கொள்வார்கள் என்று நம்புவதாகவும் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை அடுத்த சில வாரங்களில் ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ-8)

### அரசு - புலிகள் சமாதானப் பேச்சு

## திகதியை நிர்ணயிக்கும் பொறுப்பு நோர்வே பிரதிநிதிகளுக்கு உண்டு

போராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

### யாழ் பல்கலைக்கழகத்தில்

## பொறியியல் பீடம் அமைக்க மானிய ஆணைக்குழு அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிப்பதற்கு மானிய ஆணைக்குழுவின் பொறியியல் நிலையியல் குழு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

உத்தேசிக்கப்பட்டுள்ள பொறியியல் பீடத்தில், மின்சாரம், மின்னியல், தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் தொழில்நுட்பம், பொதுத்துறை

(02ம் பக்கம் பாரக்க)

## அரியாலை கிழக்கில் நான்கு மனித எலும்புக்கூடுகள் மீட்பு

### இராணுவத்தினருடையது எனச்சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்குப் பகுதியில் இராணுவத்தினருடையது எனக் கருதப்படும் நான்கு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்றுப் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடுகளுடன் இரண்டு இராணுவ அடையாள அட்டைகளும் இராணுவச் சீருடைகளும் மீட் மோதல்களில் நான்கு இராணுவத்தினர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த நான்கு இராணுவத்தினருடைய எலும்புக்கூடுகளுமே தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

யாழ் மாவட்ட நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று எலும்புககூடுகளைப் பார்வையிட்டுள்ளார். இந்த

இராணுவ அடையாள அட்டைகளும் இராணுவச் சீருடைகளும் மீட்கப்பட்டுள்ளன.

2001ம் ஆண்டு மேமாதம் அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற [illegible] களைப் பார்வையிட்டுள்ளார். இந்த நான்கு எலும்புக்கூடுகளும் மரபணுப பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (த)

## பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிக்கும் பொறுப்பு நோர்வே அரசின் பிரதிநிதிகளுக்கே உண்டு என்று அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் செய்தியாளரகளிடம் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் கூட்டத்திலேயே அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

சமாதானப் பேச்சுவார்த்தையைத் தாமதமின்றி விரைவில் நடத்துவது தான் அரசின் விருப்பமாகும். இதற்கான பூரண ஒத்துழைப்பையும் அரசாங்கம் வழங்கும்.

யுத்த நிறுத்த புரிந்துணர்வு

(02ம் பக்கம் பார்க்க)

## பதிவு செய்யப்படாத வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாது பாவனையில் உள்ள மோட்டார் வாகனங்களின் பதிவுகளை யாழ் செயலகத்தில் மேற்கொள்வதற்கு தனியான பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு அப்பிரிவு நேற்று முதல் இயங்குவதாக யாழ் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

பதிவு இல்லாத வாகனங்களை யாழ்ப்பாணத்தில் பதிவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்படுமென கொழும்பில் இருந்து வந்த மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் கே. ஜினதாஸ தெரிவித்ததாக வலம்புரி நேற்று செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (வ)

# 18 வயதுக்கு குறைந்தவர்களை சேர்த்துக்கொள்ளமாட்டோம்

### யுனிசெவ்வுக்கு புலித்தேவன் உறுதி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் 18 வயதுக்குட்பட்டோரைத் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதில்லை என்று தம்மிடம் உறுதியளித்ததாக யுனிசெவ் நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்கிறாரகள் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் புலித்தேவனுடன் யுனிசெவ் நிறுவன சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துரையாடியபோதே இவ்வுறுதி மொழி புலிகளால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புலிகள் அமைப்பில் உள்ள 60 ற்கும் மேற்பட்ட 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விடுவிக்கவும் அவர்கள் இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான விடயங்களில் மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் போர்ச் சூழல் காரணமாகப் பாதிக்கப்பட்ட

(2ம் பக்கம் பார்க்க)

### விண்ணப்பம் கோரல்

மனித வள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் ஆசிரியர் கல்வியயில் உயர் தொழிற் பயிற்சி நெறிக்கு 2003ம் ஆண்டுக்கான அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் யூலை மாதம் 20ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் (வ)

## அமைச்சர் கொடித்துவக்கு பல்கலைக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவிலும் கல்லூரித்தின விழாவிலும் கலந்து கொள்வதற்காக இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள மனிதவள மேமபாட்டு கல்வி கலாசார அமைச்சர கருணாசேன கொடித்துவக்கு இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கும் விஜயம்

(2ம் பக்கம் பார்க்க)

## தேசிய பட்டியல் எம்.பி வன்னிக்கு வழங்க வேண்டும்

(வவுனியா)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கட்சியின் பிரதிநிதித்துவம் இல்லாத வன்னி மாவட்டத்திற்கு இடம் வழங்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் கட்சியின் தலைமைப் பீடத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(2ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வீடு வளவு விற்பனை

நவாலி வடக்கு,புலவர்வீதி அருகே அமைந்துள்ள வீடும் வளவும் அடங்கிய 7 1/2 பரப்புக் காணியும், அதே இடம் சோமசுந்தரப் புலவர் வீதியில் 7 1/2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- யோ. செபஸ்தியாம்பிள்ளை, சென் செபஸ்தியன் லேன், மாதகல்.

நவாலித் தொடர்பு:- க. ஜெபச்சந்திரன், முருகன் கோவிலடி அட்டகிரி.

(5466)

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கட்டுரைகள்50

மொழிவிருத்தி, சிறுவர் பாடல். சாயி கல்வி வட்ட வெளியீடு எழுதியவர் கே.வி. குணசேகரம். விபரங்கட்கு: ஹரிஹரன் பிரின்ரேர்ஸ், 224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன் 2717

(5443)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில O/L, A/L மேற்படிப்பு, வேலை பார்ப்பவர்க்கு என தனித்தனி வகுப்புகள் நடைபெறுகின்றது.

ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5470)

### வகுப்பு

புதிய கராட்டி வகுப்புகள் திருநெல்வேலி Y.M.H.A மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன. சனி, ஞாயிறு காலை 7.30 மாலை 4.30 ஆசிரியர் P.ராஜன் மாஸ்டர்

(கி-4510)


### தேவாரகாலத்

மூர்த்தி சுவாமிகள். அங்ஙனம் அவர் நித்திய மணவாளனாகி அங்கு நாளதோறும் மணமுரசு ஒலிக்கவேண்டுமே! ஆம்,மணமுரசு சுந்தரர் செவிகளில் ஒலித்தது. மாதோட்ட நகரின் அயலிலுள்ள மறிகடல் நாளதோறும் மங்கல ஒலி செய்து கொண்டேயிருக்கும். 'மாடெலாம் மணமுரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டம்' என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரப் பதிகம் ஒன்றிலே வரும் இவ்வடி திருக்கேதீச்சரத்து மணவாளனின் மங்கலமுரசு எது என்பதை எமக்குத் தெரிவியா நிற்கின்றது. அக்கடலானது இனறு ஆழம் குறைந்ததாய் இருந்த போதிலும், பண்டுபாய்க கப்பல்கள் பலவோடிய மறிகடலாகத் திகழ்ந்தது. அக்கடலில் சங்குகள மலிந்து கிடந்தன. அதன் அயலில மாதோட்டம் புகழ்பெற்ற சிறந்த துறைமுகமாக இலங்கிற்று. அக்கடல் களைகடல்எனவும்,மறிகடல் எனவும், வங்கம மலிகின்ற கடல் எனவும, வானத்துறு மலியும் கடல் எனவும், கறையார் கடல் எனவும் தேவாரங்களில் புகழ்ந்து பேசப் படுகின்றது.

எனவே திருக்கேதீச்சரத்து இறைவன் இன்னருளைப் பாடிய நாயன்மார்கள மாதோட்டத்தின் சீரையும், சிறப்பையும் பாலாவியின் பாங்கையும் அழகாகத் தேவாரங்களில் எடுத்துரைத்துப் போந்தார்கள். பண்டு எழில் மிக்குத் திகழ்ந்த இப்புனித நகர் இடைக்காலத்தில் சிதைவுற்றுக் காடடர்ந்து கிடந்ததை எண்ணுந் தோறும் சைவப் பெருமககளின் உள்ளங்கள் நைந்து வருந்துமன்றோ.

நன்றி
ஈழச்சுடர் 1965

# 10 ஆண்டுகள் பணியில் ஈடுபட்ட 'ஜயாகோல்ட்' செஞ்சிலுவைக் கப்பலின் சேவை நேற்றுடன்நிறுத்தம்

(கொழும்பு)

திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான சேவையில் கடந்த 10 வருடங்களாக ஈடுபட்டு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கப்பலான 'ஜயாகோல்ட்' நேற்றுடன் தனது பணியை நிறுத்திக் கொண்டது.

யாழ். கண்டி வீதி திறக்கப்பட்டுள்ளதை அடுத்து தரைவழியூடாக சகல பணிகளும் இடம்பெறுகின்ற நிலையில், இக் கப்பல் சேவை தேவையற்றதாக காணப்பட்டதையடுத்தே நிறுத்தப்பட்டுள்ளதாக பரப்புரை அதிகாரி எஸ். புஸ்பராசா தெரிவித்தார்.

மேற்படி கப்பல்,நோயாளர்களை மட்டுமன்றி வடபகுதிக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் இலவசப் பாடநூல்கள், தபால் பொதிகள் என்பவற்றை எடுத்து வரும் பணியில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் குடாநாட்டுமக்களுக்கு சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,நேற்று இடம்பெற்ற யாழ். குடாநாட்டுக்கான இறுதிச் சேவையில், சிகிச்சைக்காக கொழும்பு சென்ற 14 நோயாளர்கள் இங்கு அழைத்துவரப் பட்டதுடன்,குடாநாட்டுக்கான 99 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டன.

மேற்படி கப்பல் இம் மாதம் 30 ஆம் திகதி சிங்கப்பூர் திரும்பவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### தேசியப்பட்டியல்

வன்னிமாவட்டத்தை சேர்ந்த ஒருவருக்கு எம்.பி. பதவி வழங்கவேண்டுமென்று கோரும் கடிதத்தில் சுமார் 30அங்கத்தவர்கள் ஒப்பமிட்டுள்ளனர் (வ)

### 18வயதுக்கு

குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பது பற்றி ஆராயப்பட்டதாகவும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகள் 18வயதுக்கு குறைந்தோரை தமது அமைப்பில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக ஊர்ஜி தப்படுத்தப்படுமானால் அதுதொடர்பாக ஆராயப்படுமென்றும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (இ·8)

### அமைச்சர்

செய்யவுள்ளனர் என துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கருணசேனா கொடித்துவக்கு ஜெயவர்த்தனபுரபல்கலைக்கழக துணை வேந்தராகவும் யாழ்பல்கலைக்கழக முன்னாள்துணை வேந்தர் அமரர் பேராசிரியர் அ·வித்தியானந்தனின் விருப்பத்துக்குமுரியவராவார். (வ)

### திகதியை

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது முதல்சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் பிரதமரின் சமாதான செயலணி இயக்குநர் பேர்னாட் குணதிலக்கா விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வனுடன் பயனுள்ள பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதானபேச்சிற்கு முன்னர் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்துபேசி அவர்களின் இணக்கப்பாட்டுடன் பொதுக்கொள்கை ஒன்று வகுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். (வ)

## நூல் வெளியீடும் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் சமூக ஏற்பாட்டில் மானுடம்-சமூகவியல் ஏடு 4 வெளியீடும், கலாநிதி என். சண்முகலிங்கனின் மரபுகளும் மாற்றங்களும்- நூல் அறிமுகமும் இன்று பி. ப.3. 00 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் சமூகவியல் சமூகதலைவர் எஸ்.காயத்திரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை,கலைப்பீடாதிபதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி அ. சண்முகதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வெளியீட்டுரைகளை கலாநிதி என். சண்முகலிங்கன், அ·அரிச்சேட் மற்றும் மதிப்புரைகளை நான் உளவியல் சஞ்சிகை ஆசிரியர் வண. போல்நட்சத்திரம், தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## யாழ் தேசிய கல்வியியல் கல்லூரித் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரிதினம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரிமண்டபத்தில் பீடாதிபதி தி.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மனிதவள விருத்தி கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மற்றும் கௌரவ விருந்தினராக மனிதவள விருத்தி கல்வி, கலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வியல்கல்லூரிக் கிளையின் பிரதம ஆணையாளர் எம். இப்ரகீம் மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசாரஅமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் டி.வசநாயக்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய தினம் கல்விக் கல்லூரியின்'கலாசுரபி' மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (உ-6)

## இராசி பலன்

21-06-2002
(ஆனி 07 வெள்ளி)
ஏகாதசி மு.ப 9.48
சுவாதி பி.ப 1.52 வரை
இராகுகாலம் 10.24-11.54
நல்லநேரம் 5.54-7.24

**மேடம்**
அதிகாரம், உடற் சுகம், சென்ற இடத்தில் சிறப்பு.

**இடபம்**
முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு, பணவரவு, நல்லசெய்தி.

**மிதுனம்**
உடல்நலக்குறைவு, தூர தேசப் பயணம், ஆலய தரிசனம்.

**கடகம்**
உடல் உபாதை, காரிய சித்தி, இனசன கொண்டாட்டம், போசன சுகம்.

**சிங்கம்**
காரிய சித்தி, மனமகிழ்ச்சி பணவிரயம், உஷ்ணம்.

**கன்னி**
கௌரவக்குறைவு,பொருள் விரயம், கற்பனை மிகுதி, சயனசுகக் குறைவு.

**துலாம்**
குடும்பக்கவலை, பண விரயம், பெரியோர் ஆதரவு, தெய்வ சிந்தை.

**விருச்சிகம**
புத்திரரால்கவலை, விருந்தினர்வருகை, மனக்கிலேசம்

**தனுசு**
கூட்டுமுயற்சி, ஆரோக்கியம்,காரியவெற்றி பணவரவு

**மகரம**
காரிய அலைச்சல், குடும்ப சுகம், தொழில் நன்மை, சுவாரஸ்யம்.

**கும்பம்**
நினைத்தகாரியம் கைகூடும் ரோகபயம்,உடல்வியாதி

**மீனம்**
அதிகபிரயாசை, அந்நியர் உதவி, காரியத்தடங்கல், மனச்சஞ்சலம்

(பழைநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## அரையிறுதி ஆட்டம்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் 16 ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக யுத் கார்மேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் நாளை சனிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு குருநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில்,றோயல் வி.க. எதிர் சென் நீக்கிலஸ் வி.க.ஆகியன மோதவுள்ளன. (உ)

### பொறியியல்

ஆகிய துறைகள் அமைக்கப் படவுள்ளன.

பொறியியல்பீடத்தை அமைப்பதற்கு, கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருவரின் உதவியுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இங்கிலாந்தில் உள்ள பரதன் என்பவர் உறுதுணையாக இருந்தார் என்றும்,இப்பீடத்திற்கான ஆளணி, கட்டிடம், ஆய்வுகூட வசதிகள் ஆகியவற்றைப் பெறுவதற்குகல்விமான்கள் உட்பட பலதரத்தினரும், அரசியல்வாதிகளும்உந்துசக்தியாக இருந்து ஒத்துழைக்க வேண்டும் என்றும் துணைவேந்தர்பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை விருப்பம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளமுறிகண்டிப் பகுதியில் இப்பீடத்தை அமைப்பதற்கு கொள்வனவு செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டகாணியில் அமைக்கப்படவுள்ளதாகவும்,நிரந்தரகட்டிட ஆளணி வசதிகள் பெறும்வரை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு காலகதியில் முறிகண்டியில் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசினர் பொது வைத்தியசாலை வளவினுள் பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர் ஆதாரம் காட்டி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பணிப்பாளர் செல்வி கே. நவமலர் அறிவித்துள்ளார். (உ)

## சான்றிதழ் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் நடத்தப்பட்ட முன்பள்ளி அடிப்படைக் கற்கை நெறியினை பயின்றவர்கள் தமது சான்றிதழ்களை புறநிலைப்படிப்புகள் படிப்புகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் என அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ

## வீதியில் நெரிசல்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அண்மைக் காலங்களில் மிகுந்து காணப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் வாகனங்கள் பாதை ஓரங்களில் தரித்து நிற்பதால் வேறுவாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (உ-59)

## இலங்கை மின்சாரசபை யாழ் பிரதேசம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியுள்ளதால் நாளை (22- 06- 2002) சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 5.00 மணிவரையும் யாழ்ப்பாண குடாநாடு பூராவும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

இதனால் ஏற்படும் சிரமங்களுக்காகவும் மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
இலங்கை மின்சாரசபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
இலங்கை மின்சாரசபை.

(கி-4501)

# தொண்டர் ஆசிரியர் பகிஷ்கரிப்பு

# கல்விசார் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(கிளிநொச்சி)

இராணுவக்கட்டுப்பாடற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரநியமனம் கோரி நேற்றுமுன்தினம் பகிஷ்கரிப்புபோராட்டம் ஒன்றை நடத்தினர்.

வன்னி மாவட்டத்தின் பல பாகங்களிலுமுள்ள அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் இப் பகிஷ்கரிப்புபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வன்னி மாவட்டதொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரியும்,

வன்னி மாவட்டத்தில் தொடர்ந்தும்நிலவி வரும்ஆசிரியர்களின் பற்றாக்குறைகாரணமாக பாடசாலை மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைந்து வருவதைக் கண்டித்தே இப் பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்றபகிஷ்கரிப்பு போராட்டத்தினால் இவ்விரு மாவட்டங்களின் அனைத்து கல்வி சார் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

# வடக்கு-தெற்கென வகை பிரிப்பது மக்கள் வங்கியின் நோக்கமல்ல

## சேவை ஒன்றேஎண்ணம் என்கிறார் தலைவர் லால்நாணயக்கார

(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஒரு சலுகையும், தெற்கில் வேறோர் வித சலுகையும் வழங்குவது மக்கள் வங்கியின் நோக்கமல்ல.

மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த வங்கி, எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற ரீதியில் பாரபட்சமற்ற வகையில் செயற்பட்டுவருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கித்தலைவர் லால் நாணயக்கார

அண்மையில் கடமை நிமித்தம் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்த மக்கள் வங்கித் தலைவர் லால் நாணயக்கார' சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் டபிள்யு. ஜே. மார்ட்டீன் பெர்னாண்டோ ஆகியோர் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றினை நடத்தினர்.

இதன் போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட லால்நாணயக்கார தொடர்ந்தும் பேசுகையில்,

எவ்வித பேதமுமின்றி வடக்கு-கிழக்கு மக்களுக்காக மக்கள் வங்கி சேவையாற்றி வருகின்றது.

இவர்களின் தேவையறிந்து அதற்கு முன்னுரிமையளித்து கடன் அடிப்படையில் உதவிகளை வழங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எமது நோக்கம் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையின் உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன், வட வலய பிராந்தியமுகாமையாளர் எம்.கே. சிவபாதவிருதயர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.சிவாஜிலிங்கம் உட்பட வாடிக்கையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(உ-6)

### பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில்

# புதிய நடைமுறைகள் குறித்து ஆட்பதிவுத்திணைக்களம் ஆராய்வு

(கொழும்பு)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரமொன்றிற்கு வழங்கப்படும் ஒரு இலக்கமே பின்பு அந் நபரின் தேசிய அடையாள அட்டையின் இலக்கமாகவும் பயன் படுத்தத் தக்கதான ஒரு புதிய நடை முறையை அமுல் செய்வது தொடர்பாக ஆட்பதிவுத் திணைக்களம் ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பாக திணைக்களம் உட்துறை அமைச்சுக்கும் அறிவித்துள்ளன.

இதனை அமைச்சு ஏற்றுக்கொள்ளுமாயின் எதிர் காலச் சந்ததிக்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று திணைக்களத்தின் தலைவர் விஜய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பொழுது 16 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

16 வயதிற்குஉட்பட்டமாணவர்கள் பலர் கல்வித் தேவைகளுக்காகவோ, விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காகவோ வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டி வரும் போது பலவித தொல்லைகள் ஏற்படுகின்றன.

வெளி நாட்டில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு செல்லுமிடத்தும் இவர்கள் சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

இப்போது முன்வைத்துள்ள திட்டத்தின்படி சிறுவர்களின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தில் இடப்படும் ஒரு இலக்கமும் பின்னர் அச் சிறுவர்களின் தேசிய அடையாள அட்டையிலும் இடம் பெறப் போகிறது என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிந்து கொள்வர்.

இதனால் சிரமங்களின்றி இவர்கள் தத்தமக்கு வேண்டிய அரச அனுமதிகள், வசதிகளை பெற்றுக் கொள்ள முடியும். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இதனால் பெரிதும்அனுகூலமடைவர். இவ்வாறு ரணசிங்க இது குறித்து விளக்கியுள்ளார்

(உ)

### வடமராட்சி கிழக்கில்

## 5 பாடசாலைகள்

# தொடர்ந்தும் செயலிழப்பு

(தென்மராட்சி)

வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வருவதைத் தொடர்ந்து அங்கு மொத்தமாகவுள்ள 12 பாடசாலைகளுள் 7 பாடசாலைகள் தற்போது மீளவும் இயங்கிவருகின்றன

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று ஆர். ஆர். த.க பாடசலை, தாழையடி றோ.க.த.க, பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வராக் கல்லூரி, ஆழியவளை த.க. பாடசாலை மற்றும் உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகளே அங்கு இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளுக்கான மாணவர் வரவு தொகை படிப்படியாகமுன்னேறிவருவதாகவும் கூறப்படுகிறது(உ 77

# நிர்வாகிகள் தெரிவு

(தென்மராட்சி)

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இச்சங்கத்தின் புதியவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக க. சுகுந்தன், செயலாளராக க.முருகதாஸ், பொருளாளராக ந. தனபாலசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் 12பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

(உ-77)

### இலங்கை-குவைத்

# இரட்டை வரித் தவிர்ப்பு அமுலுக்கு வந்தது

(கொழும்பு)

இலங்கைக்கும் குவைத்துக்கும்மிடையோயன இரட்டை வரித் தவிர்ப்பு ஒப்பந்தம் நேற்று முன்தினம்முதல்அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வொப்பந்தம் மூலம் இலங்கைக்கு அதிகளவிலான முதலீடுகளை பெற்றுக் கொள்ள முடியும் என நிதிய மைச்சர் கே.என்.சொக்ஸி நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில்கருத்து தெரிவித்தார்.

குவைத்-இலங்கைக்குஇடையில் நேரடி விமான சேவையினை நடத்துவதன் மூலம் ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனமே அதிகளவு நன்மையடையும்நிலை உள்ளதுஎனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

(உ-8)

## அக்கரைப்பற்றில் கண்காணிப்புக் குழு அலுவலகம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கண்காணிப்பு குழுவின் உப அலுவலகம் அண்மையில் அக்கரைப்பற்றில் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட கரையோர தமிழ், முஸ்லிம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே அக்கரைப்பற்று. அம்பாறை வீதியில் இவ்வலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(உ-8)

# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 12

(உற்சவகாலம்)



## வாழ வழி வகுப்பாய் தாயே

நயினை உறை நாகம்மா தாயே
நலமுடனே எம்மைக் காத்தருள் தாயே
வருவினைகள் நீக்கி எம்மை தாயே
வளமுடனே வாழ வழிவகுப்பாய் தாயே

திருமதி ராகினி தேவராஜா நயினை.

## ஏகாந்த சக்தி

எடுப்பு

ஆதிசக்தி பராசக்தி அன்னை நாக பூசணிச் சக்தி
சோதியாக அலைகடல் நடுவே துலங்கும் வீரதீர சக்தி
(ஆதி)

தொடுப்பு

நாகமன்னர் நாட்டியசக்திநயினைத்தீவில் நடமிடும் சக்தி
போக மெல்லாம் அருளிடும் சக்தி புனித கருணை பொழி
-யும் சக்தி
(ஆதி)

முடிப்பு

அன்னம் அளிக்கும் பூரணிச் சக்தி; ஆக்கம் ஊக்கம்
-தேடும் சக்தி
பின்னும் பற்பல பேறுறும் சக்தி; பிரியமான பெரும்பரா
-சக்தி
கண்ணில் கனிவு காட்டும் சக்தி; காரியம் யாவும்
-கடவும் சக்தி
எண்ணில் அடங்கா ஏகாந்த சக்தி எங்கள் நாக
-பூசணிச் சக்தி

நயினைக் கவிஞர் நாகசண்முகநாதபிள்ளை

## தோச நிவர்தினியே!

கொஞ்சு தமிழில் குழைந்
தெடுத்த இனிய கவியில்
விஞ்சுகின்ற நின்னருளை
வினையறுக்கும் திறனை
நெஞ்சத்து நானிருத்தி-உனை
நினைந்துருகிப் பாடுகிறேன்
நஞ்சு நாகதோச நிவர்தினியே
நயினையுறை நாக பூசணியே!

பஞ்சாமிர்த பாலன்

## விரைந்து வந்து எமைக் காரும்

அலைகடலின் மத்தியிலே ஆர்ப்பரவம் செய்யும்
அன்னம் நித்தம் சொரிந்திடும் சொர்ணாம்பிகையே
பாடி துதிக்கும் எம்மடியார் அருள் பெருகிட
பாண்டிமா தேவியே வந்து நடம் செய்யுமம்மா'
'சாந்தி சமாதானம் சகோதரத்துவம் வையமெங்கும்
-நிலைக்க
சண்டிகா, பரமேஸ்வரி, மாகாளி, மனோன்மணி என
தீயவராம் பகைவரை வீழ்த்திட அலைமேல் தவழும்
-நாயகியே
உன் ஆசனம்விட்டு விரைந்துவந்துஎமை காத்திடம்மா'

தும்பளையூர், பங்கயன்

## கேட்ட வரம் தருவாய்

அலை கடல் அருகே அருளாட்சி
அலையலையாய் அடியார் கூட்டம்
அன்னை நாகபூசணியின் திருக்கோலம்!
காண்பவர் பாவங்கள் தொலைந்து விடும்
கேட்ட வரங்களைத் தருகின்ற தாயவள்
பாட்டினால் அருச்சனை செய்கின்றோம்
மலை போன்ற துன்பங்களை விலக்கிடுவாய்
மனமுருகிப் பாடி அருச்சனை செய்கின்றோம்

மீசாலையூர் கமலா.

# உலகில் 150 மில்லியன் பேர் நீரிழிவினால் பாதிப்பு

(கொழும்பு)

முன்பு வயது முதிர்ந்தவர்களை பாதித்து வந்த நீரிழிவு நோய் இப்பொழுது 30-45 வயதினரை அதிகமாக பாதிக்கத் தொடங்கியுள்ளது என்று தேசிய நீரிழிவு மையத்தின் தலைவர் டாக்டர் மகேன் விஜய சூரிய தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டில் நகரப்புற மக்களில் 12 சதவீதத்தினரும், கிராமப்புற மக்களில் 7.7 வீத மக்களும் நீரிழிவினால் பாதிக்கப்பட்டிருப்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

2000 ஆம்ஆண்டிற்கு முன் நகரப்புற மக்களில் 5 சத வீதத்தினரும் கிராமப்புற மக்களில் 2 சத வீதத்தினருமே நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இளவயதினரே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டு வருவது கவலை தருவதாகும்.

20 வயதுக்குட்பட்ட மாணவர்களும், பல்கலைக் கழகத்தில் கற்கும் மாணவர்களும் இந்நோயினால்பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

10 ஆண்டுகளுக்கு முன் இவ்வாறான நிலை இருக்கவேயில்லை. இப்போது உணவுப் பழக்கங்கள் மாறிவிட்டதே இதற்கு முக்கிய காரணம்.

1990 இல் 30 வயதிற்கு குறைந்தவர்கள் எவருமே நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டிருக்கவில்லை. இன்று உலகில் 150 மில்லியன் பேர்கள் இவ்வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# யாழ். மாணவர்களுக்கு சமாதான குடைகள் ஞாயிறன்று வழங்கல்

(யாழ்ப்பாணம்)

துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து நாளைமறுதினம்ஞாயிறன்றுகாலை9.00 மணிக்கு கொழும்புஜெயவர்த்தனபுரலயன்ஸ் கழகத்தினால் யாழ். மாணவர்களுக்கு சமாதானக் குடைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண வலயத்திற்கு ஆயிரத்து 420 சமாதானக் குடைகளும், வலிகாமவலயத்திற்கு 580 சமாதானக் குடைகளும் வழங்கப்படவுள்ளன. உரியமாணவர்களை தவறாது அழைத்துவருமாறு மேலதிக மாகாண கல்வித் திணைக்களம் பாடசாலைகளைக் கேட்டுள்ளது. (உ-2)

# யாழ் குடா நாட்டிலுள்ள கண்ணிவெடிகளை அகற்ற 5வருடங்கள் பிடிக்கும்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில்கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளை முற்றாகஅகற்றுவதற்கு குறைந்தது இன்னும் 5 வருடங்களாவது செல்லுமென கண்ணிவெடி அகற்றும் குழுவின் தலைவர் டொன்சிமித் கூறியுள்ளார்.

அமெரிக்கரான டொன்சிமித்தும் மொசாம்பிக்காவைச் சேர்ந்த 9பேரும் குடா நாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# சுவீடன் நாட்டின் உதவியுடன் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையம் அமைக்கத்திட்டம்

(கொழும்பு)

இலங்கைப் பத்திரிகை சபை திருத்தச்சட்ட மூலம் மற்றும் குற்றவியல் திருத்தச் சட்ட மூலம் ஆகியன அண்மையில் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டன.

ஊடகவியலாளர்கள் மீது விதிக்கப்படும் தண்டனைகளை நீக்குவதற்கு இந்த திருத்தச்சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் டபிள்யூ. ஜே எம். லொக்கு பண்டார இந்தசட்டமூலத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் தகவல் சேகரிக்கும் போது தகவல் வழங்கியவர்களைப் பாதுகாக்கும் சட்டத்திருத்தம் ஒன்றும் விரைவில் கொண்டுவரப்படுமென அரசியலமைப்பு விவகார அமைச்சர்பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ளசட்டங்களின்படி ஊடகவியலாளர்கள் தாம் தகவல்களைப் பெற்றுக் கொண்ட விதத்தை சட்டத்தின் முன்வெளியிடவேண்டிய நிர்ப்பந்தம்உள்ளது.

இதேவேளை, ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிலையம்ஒன்றைசுவீடன் நாட்டுஉதவியுடன் ஆரம்பிக்க இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

# புலிகளின் பெயரைக் கூறி திருடர் கைவரிசை

(மந்திகை)

வயோதிபர்கள் தனித்திருந்த வீட்டில் விடுதலைப்புலி உறுப்பினர் என தெரிவித்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பெறுமதிவாய்ந்த நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை உடுப்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முன்னிரவு 11 மணியளவில் உறக்கத்திலிருந்தவேளை தம்மை எழுப்பி விடுதலைப் புலிஉறுப்பினர் என அறிமுகப்படுத்திய சிலர் வீட்டில் சந்தேகத்திற்குஇடமான பொருட்கள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும்வீட்டை சோதனையிடப் போவதாகவும் கூறி சோதனையில் ஈடுபட்டதாகவும், பூட்டப்பட்டிருந்த அலுமாரியைத் திறக்குமாறு கோரி அதனுள் இருந்த பெறுமதி வாய்ந்த தாலிக்கொடி மற்றும் தங்க நகைகளை எடுத்துக்கொண்டு அங்கிருந்த ஓர் முதியவரை காலால் உதைத்து விட்டு தப்பியோடியதாகவும் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி அரசியல்துறை அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (உ-23)

# எரி பொருள்களின்விலை மேலும் அதிகரிக்கும்

(கொழும்பு)

எரிபொருள்களின்விலையை மேலும் அதிகரிப்பது குறித்து இலங்கைபெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆலோசனை நடத்தி வருகிறது.

சர்வதேசவிலைக்கும் இங்கு, தற்போது நடைமுறையில் உள்ளவிலைக்கும் இடையில் ஒரு லீற்றருக்கு 50 சதம் வித்தியாசத்தில் உள்ளது.

பெறுமதி கூட்டப்பட்ட வரி தொடர்பாககூட்டுத்தாபனம் கவனம்செலுத்திவருவதனால் இன்னும் ஓரிரு தினங்களில் இதுதொடர்பான முடிவெடுக்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் அடிக்கடி பெற்றோலியப் பொருள்களின் விலைகள்அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தண்டப் பணம் அறவீடு

(மந்திகை)

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் கைதடிப் பகுதியில் மணல் ஏற்றிய, உழவு இயந்திரங்களின் சாரதிகள் ஐவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைதுசெய்து-

கடந்த திங்களன்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, அவர்களை தலா 5 ஆயிரம் ரூபாவை குற்றப்பணமாகச் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-23)

# கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் வருமானம் ஈட்டும் வகையறியாது தவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்பலர் தமதுஜீவனோபாயத்துக்கான வருமானம் எதுவுமின்றி கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இத்தகைய பெண்கள் தமது பிள்ளைகளின் கல்வி, உணவு மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கான நிதியைப் பெறமுடியாத நிலையிலும்,

அரசினால் வழங்கப்படும் மாதாந்தநிவாரணப்பொருட்களிலேயே முக்கியமாகத் தங்கியிருந்தும் வருகின்றனர்.

அதேவேளை இவ்வாறான பெண்களுக்கான வருமான மீட்டும் திட்டங்களை அமுல் செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள்எதுவும்அண்மையில் முன்வரவில்லை எனவும் கூறப்படுகின்றது.

மாவட்டத்தில்பல்வேறு காரணங்களுக்காகவும்கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் தொகைகள் கிராமியரீதியில் அதிகரித்துவருவதாகவும் அறியப்படுகின்றது.

குடாநாட்டில் காத்திரமான பெண்கள் அமைப்பு இல்லாமையே இத்தகைய பெண்களின் சமூக ஆரோக்கியமற்ற நிலைக்குக் காரணம் எனவும் சுட்டிக் காட்டப் படுகின்றது. (உ-77)

# இந்திய உயர் ஸ்தானிகர் மட்டு. திடீர் விஜயம்

(மட்டக்களப்பு)

இந்திய உயர்ஸ்தானிகர் கோபாலகிருஷ்ணகாந்தி அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்கு, கிழக்குப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எம். எஸ். மூக்கையா, பீடாதிபதிகளைச் சந்தித்து உரையாடினார்.

சமாதானச் சூழ் நிலையில் இனப்பிரச்சினைதொடர்பாக மக்களின் எதிர் பார்ப்புகள் பற்றியும், பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

கோபாலகிருஷ்ணகாந்தி தரை வழிமார்க்கமாகவே தனதுவிஜயத்தைமட்டக்களப்பிற்கு மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், இந்திய தூதரக கல்விப்பதிவு முதலாவது செயலாளர் இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார். (உ-8)

# வர்த்தகர் குழு 27இல் யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் பல்துறைசார்ந்த 23 பேரடங்கிய தென்பகுதி வர்த்தகர் குழு ஒன்று எதிர்வரும்27ஆம்திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இலங்கை தேசிய வர்த்தக சங்கத்தின் செயலாளர் நாயகம் நீல் செனிவிரட்ண தலைமையில் வரும் இக்குழு அன்றையதினம் மு.ப. 11. 00 மணிக்குயாழ்.வணிகர் கழகத்தில், சங்கப்பிரதிநிதிகளுடன் யாழ். குடாநாட்டுவர்த்தக நிலை தொடர்பாக ஆராயவுள்ளதுடன்,

பி.ப. 2. 00 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ப.நோ.கூ.ச. பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் அங்கத்தவர்களையும் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

தொடர்ந்து பி.ப. 4. 30 மணிக்கு யாழ். பொது நூலகம், மற்றும் பொதுஸ்தாபனங்களை இக்குழு பார்வையிடவுள்ளது. (உ-6)

# 2 வருடத்தின் பின் சாவ.மக்கள் வங்கிக் கிளை இயங்குகிறது

(தென்மராட்சி)

இருவருட இடைவெளியின் பின்னர் சாவகச்சேரி மக்கள் வங்கி மீண்டும் சாவகச்சேரியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி பிரதான வீதியிலுள்ள ஒரு தனியார் கட்டடத்தில் அமைந்துள்ள இவ் வங்கியின் சேவையை நேற்றுமுன்தினம் மக்கள்வங்கியின் தலைவர்லால் நாணயக்கார சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பொது முகாமையாளர் டபிள்யூ. ஜே. மார்ட்டின் பெர்னாண்டோ, வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் பிரதேச முகாமையாளர் எம். கே. சிவபாதவிருதயர் ஆகியோர் பங்குகொண்டனர்.

சாவகச்சேரி மக்கள் வங்கி நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

# விவசாயபீட விஞ்ஞான வினாவிடைப் போட்டி 2ஆம் சுற்று 29 இல்

(யாழ்ப்பாணம்)

ஜி. கிருபாகரன், ரி. ஜெயக்குமார் ஞாபகார்த்தமாக விவசாய பீட மாணவர் ஒன்றியம், யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை வளர்க்கும் நோக்குடன்கடந்த 4ஆம் திகதிவிஞ்ஞானவினாவிடைப் போட்டி ஒன்றினை நடத்தியது.

இதில் முதல்நிலையிலுள்ள 10 மாணவர்களின் பெயர்களையும், இரண்டாம் கட்ட வாய்மொழிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைமாணவர்களின் பெயர்களையும். விவசாயபீடமாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

எஸ். பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ். காண்டீபன் (ஹாட்லிக் கல்லூரி) இ. கீர்த்தனா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), என். சிவாகரன் (பரியோவான் கல்லூரி), எஸ். கஜேந்ரன் (ஹாட்லிக் கல்லூரி) எஸ். கர்ணன் (பரியோவான் கல்லூரி), எம். தனுஷன் (பரியோவான் கல்லூரி) எல். கேதாரசர்மா (யா இந்துக்கல்லூரி) எஸ். குமரேசன் (கரவெட்டி விக்கினேஸ்வரா), ரூ. நிஷாந்தன் (யா-இந்துக் கல்லூரி) ஆகியோரே முன்னணியிலுள்ள மாணவர்களாவர்.

ஹாட்லிக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, யா-இந்துக் கல்லூரி கரவெட்டி விக்னேஸ்வரா ஆகிய பாடசாலைகளே அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இரண்டாம் சுற்றுப் போட்டி இம் மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை விவசாய பீடத்தில்இடம்பெறவுள்ளது. (உ)

# இன்று ஒரு தகவல்

## சிந்துவெளி நாகரிகம்

மேற்குப் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திலுள்ள மொகஞ்சதாரோவிலும், பஞ்சாப்பில் உள்ள ஹரப்பாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணற்ற புதைபொருள்களிலிருந்து இந்தியாவின் சிந்து வெளிப் பிரதேசத்தில் கி.மு. 3000 முதல் கி.மு. 2000 வரையுள்ள பழங்காலத்தில் புகழ்பெற்றதோர் நாகரிகம் செழித்தோங்கியதென்று நாம் அறிந்து கொள்ளலாம்.

சிந்துவெளி மக்கள் பெரிய நகரங்களில் வாழ்ந்தனர்.

மொகஞ்சதாரோ நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் ஒழுங்காகச் செங்கற்களால் கட்டப்பட்டன. ஒவ்வொரு வீட்டிலும் பல யன்னல்களும், தாழ்வாரங்களும், பல அறைகளும், சுகாதார வசதிகளும் இருந்தன. பல அடுக்குகளையுடைய வீடுகளும் கட்டப்பட்டன. தெருக்கள் தோறும் பாதாளத்தில் செல்லும் கழிவு நீர்ப் பாதைகள் இருந்தன. இவை அடிக்கடி சுத்தம் செய்யப்பட்டன. மொகஞ்சதாரோவில் பொதுமக்கள் குளிப்பதற்கெனப் படிக்கட்டுகளையுடைய பெரிய குளமும், அதையடுத்துப் பல குளிக்கும் அறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நகரமக்களுக்குக் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன. ஆடவரும், பெண்டிரும் தங்கத்தாலும் வெள்ளியாலுமான அணிகலன்களை அணிந்தனர். சிந்துவெளி மக்கள் இறைச்சி, பால், காய்கறிகள் ஆகியவற்றை உண்டனர். சூதாட்டம், நாட்டியம், சதுரமாடல் முதலியன அவர்கள் தம் பொழுது போக்காம். உருவங்கள் செதுக்கப்பட்ட முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து, இம் மக்கள் சித்திர எழுத்துக்களின் வாயிலாகத் தம் கருத்துக்களை வெளியிட்டனரெனத் தெரிகிறது. பேராசிரியர் லாங்டன் இவ் வெழுத்துமுறை பிராமி எழுத்து முறைக்குமூலாதாரம் என்கிறார். இவர்கள் இறந்தோரை எரித்தனர். சில சமயங்களில் புதைப்பதும் உண்டு. இவர்கள் வில், அம்பு, ஈட்டி, கத்தி போன்ற போர்க்கருவிகளைப் பயன்படுத்தினர், மயிர்மழிக்கும் கத்திகள், மேனி மினுக்கும் பொருள்கள் வைக்கும் பேழைகள், தந்தச் சீப்புகள், கண்ணாடிகள் ஆகியனவும் உபயோகப்படுத்தப்பட்டன.

சிந்துவெளி மக்கள் பெரும்பாலும் நகரவாசிகளாயிருப்பினும் விவசாயமே அவர்களது முக்கிய தொழிலாம். கோதுமையும்; பார்லியும் முக்கிய உணவுப் பயிர்களாகும், ஆடுகளும், யானைகளும், நாய்களும், ஒட்டகங்களும் வளர்க்கப்பட்டன. அவர்கள் சுமேரியா போன்ற மேற்கு நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். அளவுக் கோல்களும், எடைக் கருவிகளும் உபயோகத்திலிருந்தன. பல்வேறு கைத்தொழில்களும் முன்னேறின. பருத்தி, உரோம ஆடைகள் நெய்யப்பட்டன. ஆடைகளுக்குப் பல வகைச் சாயங்களேற்றப்பட்டன. திறன் படைத்த பொற்கொல்லரும், மட்பாண்டத் தொழிலில் தேர்ச்சி பெற்ற குயவரும், அழகிய பொம்மைகள் செய்யும் தச்சரும் இருந்தனர். இரும்பைப் பற்றி இவர்கள் ஒன்றும் அறிந்திலர்,

சிவலிங்கமும், யோக நிலையில் நான்கு மிருகங்களால் சூழப்பட்டு மூன்று முகங்களையுடைய கடவுள் உருவமும் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து, சிந்துவெளி மக்கள் சிவனை (பசுபதி) வழிபட்டனரென்று அறியலாம், இந்து மதத்தின் சில அம்சங்களை அக் காலத்தில் காணலாம். லிங்க வழிபாடு நடைபெற்றதுடன், மரங்களும், மிருகங்களும் வணங்கப்பட்டன.

நன்றி

சமூகஅறிவு; நூல்-10

## உள்ளூராட்சி மன்றங்களின் மாதாந்த அறிக்கை தொடர்பாக அறிவுறுத்து

(சுதுமலை)

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநரின் கீழ் உள்ள வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக அலகுகளுக்குள் அடங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசத்தில் செய்யும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை மற்றும் செயற்பாட்டு மாதாந்த அறிக்கைகளை அடுத்தமாதம் 10ஆந் திகதிக்கு முன்னர் பிராந்திய ஆணையாளர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும் என வடக்குக்கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களையும் கடிதமூலம் கோரியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் அபிவிருத்திக்கு செலவுசெய்த நிதி அறிக்கைகளையும் செயற்பாட்டு அறிக்கைகளையும் காலாண்டு முடிவில் வரும்மாதத்தில் 10ந் திகதிக்கு முன்பாகவும் வழங்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் தயாரித்து அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-252)

## 6 ஆண்டுகளின் பின் கரும்புலிகள்தினம் கொண்டாட ஏற்பாடு

(மந்திகை)

ஆறு ஆண்டுகளின் பின் யாழ் குடாநாட்டில் கரும்புலிகள்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

1987ஆம ஆண்டு ஜூலை 5இல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் மீது நடாத்தப்பட்ட முதலாவது கரும்புலித்தாக்குதலை நினைவுகூர்ந்து வருடாவருடம் அதே நாளைத் தமிழீழம் எங்கும் கரும்புலிகள் தினமாக பிரகடனப்படுத்தப் பட்டது. 1996ஆம் ஆண்டின் பின் யாழ். குடாநாட்டில் இம்முறை இயல்பான சூழ்நிலையில் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாட்டு மக்களை இணைத்து வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மாபெரும் கரும்புலிகள் தின நிகழ்வு இடம்பெறவுள்ளதாக அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான பூர்வாங்கவேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (உ-23)

## இயந்திரப் படகு அடிக்கடி பழுது பயணிகள் நடுக்கடலில் பரிதவிப்பு

(காரைநகர்)

காரைநகர்-ஊர்காவற்றுறைக்கான சேவையில் ஈடுபடும் படகின் இயந்திரம் அடிக்கடி பழுதடைவதனால் பயணிகள் பல மணி நேரம் நடுக்கடலில் தவிக்க வேண்டியுள்ளது.

கடந்த வாரங்களில் அடிக்கடி இவ்வாறானசம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு கோளாறு ஏற்படும் நேரங்களில் அதனைத் திருத்துவதற்கு கடற்படையினர் பல மணி நேரங்களை செலவிடுவதால் பயணிகள் வெயிலில் பரிதவிக்க வேண்டியுள்ளது.

இப் பாதையூடாக பல திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், வியாபாரிகள் நீதிமன்றுக்கு செல்வோர் நோயாளர்கள்என நூற்றுக்கும்மேற்பட்டவர்கள் பயணம் செய்வதுடன் இப்போது நயினை ஆலய உற்சவ காலமாகையால் பல பக்தர்களும் தற்போது சென்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேரம் கடந்த நிலையில் பழுதடைந்த இயந்திரத்திருத்தம் பயனளிக்காத நிலையில் நடுக்கடலில்வைத்து சிறிய படகுகளில்பயணிகளை மாற்றிக் கரைசேர்த்த சம்பவமும் அண்மையில் இடம் பெற்றுள்ளது. (உ-246)

## யாழ்ப்பாண மக்களின் அறிவுப் பெருக்கத்துக்கு ஆவன செய்யவும்

### பிரி. தூதரிடம் பேராயர் வேண்டுகோள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மக்களின் அறிவுப் பெருக்கத்துக்கு உதவும் வகையில் பிரிட்டிஷ்கவுன்சில் நூலகக்கிளை ஒன்றினை யாழ்ப்பாணத்தில்நிறுவஆவன செய்யவும்.

தென் இந்தியத் திருச் சபையின் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் யாழ்ப்பாணத்துக்குவிஜயம்செய்திருந்த பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லிண்டாடபீல்டிடம்இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்.

பிரிட்டிஷ்கவுன்சில் நூலகங்கள் கொழும்பு, கண்டி போன்றமாநகரங்களில் ஆற்றிவருகின்ற சேவைகளினால் அப்பகுதிகளில் இருக்கின்ற கல்வி மான்கள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் பலன்களை அனுபவித்துவருகின்றனர்.

அதேவேளையாழ்.மாவட்ட மக்களுக்கு இத்தகைய வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாத நிலையில் கடந்த இரு தசாப்தங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

எனவே யாழ். மக்கள் மீது அதீத அன்பும் பாசமும் கொண்டுள்ள பிரிட்டிஷ் அரசு நல்லெண்ண அடிப்படையில் பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம் ஒன்றினை அமைந்துத் தரல் வேண்டும் என்றும் கேட்டார். (உ-77)

## அச்சுவேலி பாடசாலை சிறுவர் நாடகப் போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்டப்பாடசாலைகளுக்கிடையேஅண்மையில் இடம்பெற்ற சிறுவர் நாடகப் போட்டியில்,

முதலாம்இடத்தை அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியும், இரண்டாம்இடத்தை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் மூன்றாம் இடத்தினை கோப்பாய் அருள்நந்தி வித்தியாலயமும் பெற்றுள்ளன. (உ-19)

## நியாப் திட்டத்தின்கீழ் வடகிழக்கு அபிவிருத்திக்கு 40கோடி 80லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்குமாகாணங்களை அபிவிருத்திசெய்வதற்காக ஆசியவங்கி 40கோடி80 லட்சம்ரூபாவை நியாப்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுசெய்துள்ளது.

இதன்மூலம் 57புதியதிட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இவற்றை நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதுடன் வடக்குகிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதுமே நியாப்திட்டத்தின் நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்த இருவர் பலி

(கொழும்பு)

நீர் நிரம்பியிருந்த குழியொன்றினுள் தவறுதலாக வீழ்ந்த இருவர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் பேருவளையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மதுபோதையில் வந்தஇவர்கள் தவறுதலாக கால் தடக்கி இக்குழியினுள் வீழ்ந்த போதே பலியாகியுள்ளனர் என பிலியந்தலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-8)

## பட்டப்பகலில் திருடியவர் சைக்கிளை விட்டு தப்பி ஓட்டம்

(காரைநகர்)

களவெடுக்கச் சென்றவர், தனது சைக்கிளை விட்டுத் தப்பியோடிய சம்பவம் அண்மையில் காரைநகர் அறுகம்புலக் கிராமத்தில் பட்டப் பகலில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பகுதி வீடொன்றில் திருடன் ஒருவன் தனது கைவரிசையைக் காட்டிக் கொண்டிருந்த சமயம், வீட்டு உரிமையாளர் உட்செல்லவே, தான் வந்த சைக்கிளை விட்டு விட்டு தப்பினோமா பிழைத்தோமா என திருடன் ஓடிவிட்டதாக தெரியவந்துள்ளது.

இது குறித்து அப்பகுதிக் கிராம சேவையாளருக்கு முறையிடப்பட்டுள்ளது. (உ-246)

## மத்திய மாகாண ஆளுநர் பதவி விலகினார்

(கொழும்பு)

மத்திய மாகாண ஆளுநர் கே.பி. ரத்னாயக்கா அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுகவீனம் காரணமாக தொடர்ந்தும் அப்பதவியில் இருக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரத்னாயக்கா முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### கொலையும் குருதிப் பேராறும் நிறைவது ஏன்?

உலகம் இன்றோர் சிற்றூராம்
ஓங்கி வளரும் அறிவியலால்
நலங்கள் பலவும் நமக்காகி
நாமின் புறுதல் உண்மையெனில்
பலரும் பசியில் வாடுவதேன்?
பாழ்செய் போர்கள் பெருகுவதேன்?
கொலையும் குருதிப் பேராறும்
குவலயமெங்கும் நிறைவதுமேன்?

- பழையவன்

# நாட்டின் பொருளாதாரத்திற்கு புத்துயிர்

# பல்வேறு தரப்புகளுடனும் பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் கணிசமானளவு முன்னேற்றம் ஏற்பட்டதைதொடர்ந்துநாட்டின் பொருளாதாரத்திற்கு விரைவில் புத்துயிர்ப்பு அளிப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுடனும் உயர்மட்ட அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்துள்ளார்.

இது தொடர்பில்நிதியமைச்சர் சொக்ஷி,ஜீ.எல்.பீரிஸ் மிலிந்த மொரகொட பிரதிநிதியமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோரைப் பிரதமர் சந்தித்துள்ளதாகபிரதமர் அலுவலக வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இதன் போது 2இலட்சம் பேருக்குவேலை வாய்ப்புகளை வழங்குவது,2004ஆம் ஆண்டளவில் பொருளாதார வளர்ச்சி வீதத்தைகுறைந்தது 8வீதத்தினால் உயர்த்துவது மிக அவசரமாக கவனம் செலுத்த வேண்டிய பொருளாதாரத்துறைகளை இனங்காணுதல் அவற்றைதுரிதமாக அபிவிருத்தி செய்தல் என்பன பற்றியே ஆராயப்பட்டுள்ளது.

பிரதமரின் அண்மைய இந்திய விஜயத்தின் போதுஇலங்கைக்கும் இந்தியாவிற்குமான பொருளாதாரத் தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார அபிவிருத்தியுடன்தொடர்புடைய அமைச்சர்களும் பிரதமரும் இவ்விடயம் குறித்து சர்வதேசநாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களைநடத்தியுள்ளனர்.

பிரதமருக்கு இவ்விடயம் பற்றிய திட்ட அமுலாக்கல்களுக்கும் கொள்கை வரைதலுக்கும் ஆர்.பாஸ்கரலிங்கம் ஆலோசகராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மராமரத்துக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் மராமரத்துக்குழுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு மாநகரசபை உறுப்பினர் க. கிங்ஸ்லி கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-19)

## வருடாந்த உற்சவம்

வண்ணார்பண்ணை நீராவியடி ஸ்ரீஜெயவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (உ-8)

## குற்றச்செயல் அதிகரிக்க அரசியலே காரணம்

### கண்டிக்கிறார் நவீன் திஸநாயக்க

(கொழும்பு)

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதற்கு அரசியலும் ஒரு காரணம் என பெருந்தோட்டக் கைத்தொழில் துறை பிரதியமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

லலித் மித்த பண்டாரயாப்பா எழுதிய குற்றச் செயல்கள் பற்றிய புத்தக வெளியீட்டு விழாவில் அண்மையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், சட்டதிட்டங்களை கடைப்பிடித்து வரும் பொலிஸாரை சில சமயங்களில் அரசியல்வாதிகள் கட்டுப்படுத்தி வருகிறார்கள்.

இதனால் சாதாரண பொதுமக்கள் பாதிப்படைந்து வருவதுடன் நாடு சட்டதிட்டங்களுக்கு அப்பால் செல்கிறது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## தியாகிகள் தினத்தில் 40பேர் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் கடந்த மூன்று தினங்களாக அனுட்டிக்கப்பட்டு வந்த தியாகிகள் தினத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் மேற்படி அமைப்பில்இருந்து உயிர்நீத்த போராளிகளின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன்,மேற்படி அமைப்பின் உறுப்பினர்கள 40 பேர் நேற்று முன்தினம் யாழ். போதனாவைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர்.

தவிரவும்,நவாலி மகேஸ்வர இல்லம்,தெல்லிப்பளை துர்க்காதேவி சிறுவர்இல்லம், மருதனார்மடம் சிறுவர் இல்லம் உடுவில் இளையதம்பி பெண்கள் இல்லம்,நம்பிக்கை இல்லம்,இணுவில் சிறுவர்இல்லம்,சைவ வித்தியா விருத்திச் சங்கம்,தாயகம் சிறுவர் இல்லம்,ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்,கரவெட்டி சாந்தி நிலையம்,கைதடி முதியோர் இல்லம்,ஆகியவற்றுக்குவேண்டிய அத்தியாவசிய உபகரணங்களும் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (உ-19)

## மீளக் குடியமர்ந்த 40 குடும்பங்களுக்கு யுனிசெவ் உபகரணஉதவி

(காரைநகர்)

ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 40குடும்பங்களுக்கு சிறுவர்பாதுகாப்பு நிதியத்தினால் பாடசாலை உபகரணங்கள், வீட்டுப்பாவனைப்பொருட்கள் உள்ளிட்ட ஒருதொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைப் பகுதியினுள் மீளக்குடியமர்ந்த பாடசாலை மாணவர்கள்,சிறுவர்கள்அடங்கியகுடும்பங்களுக்கே இவ்வாறான ஒருதொகுதி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஏனைய பிரிவுகளிற்கும் இவ்வாறு வழங்கவிருப்பதாகவும் அதற்கேற்ப தரவுகள் பெறப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (உ-246)

## மக்கள் கருத்தறிய நெதர்லாந்து தூதுவர் மட்டக்களப்புசெல்வார்

(மட்டக்களப்பு)

இலங்கைக்கானநெதர்லாந்து தூதுவர் சூசைன் பிறைன் மூன்றுநாள்விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை மட்டக்களப்பிற்கு செல்லவுள்ளார்.

மட்டக்களப்பு செல்லவுள்ள சூசைன் நாட்டில்அரசு புலிகளால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த அமுலாக்கல் மற்றும் சமாதானம் குறித்த மக்களின் கருத்துக்களைக் கேட்டறியவுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல்துறைசிறப்புப் பொறுப்பாளர் கரிகாலன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் விசு ஆகியோரையும் இவர்சந்தித்துப்பேசவுள்ளார்.

போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் மட்டக்களப்புஆயர் கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களின்பிரதிநிதிகள், மாவட்டஅரசஅதிபர் உட்பட மட்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் இவர்சந்தித்துப் பேசவுள்ளார். (உ-8)

## சிலப்பதிகார ஆய்வரங்கில் இந்துக் குருமார்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நாளை முதல் 3 தினங்கள் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ள சிலப்பதிகார ஆய்வரங்கின் ஒர் அங்கமாக அன்றைய தினம் இந்து குருமார்கள் கௌரவிக்கப்படுவதுடன், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இந்து அனாதைச் சிறுவர்களுக்கும் உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை மு. ப 11.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் சிலப்பதிகார ஆய்வரங்கின் போது கௌரவிக்கப்படும் இந்துக் குருமார்களின் விபரங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு

ஆ. சோமசுந்தரக்குருக்கள், ஆ. சந்திரசேகரக்குருக்கள், மு. சோமசுந்தரக்குருக்கள், சோ. வாகீஸ்வரக்குருக்கள், ச. பாலசௌத்திரி, க. ஜெயராமக்குருக்கள், மு. ஐயாத்துக்குருக்கள், பூ. கீதாச்சந்திரக்குருக்கள்,கா. சாம்பசதாசிவக்குருக்கள், ந. கந்தசாமிக்குருக்கள்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு

கா. தியாகராஜக்குருக்கள், கா. துரைச்சாமிக்குருக்கள், சு. இரத்தின ஐயர், வை. ஞானசேகர ஐயர், சி. கணேசலிங்கக் குருக்கள், தி. செந்தில்நாத சர்மா, ப. சோமஸ்கந்த சர்மா, கு. பாலசுப்பிரமணியக்குருக்கள், சி. நடேஸ்வரசர்மா, நடனசபாபதி சர்மா.

நல்லூர் பிரதேச செயலக பிரிவு

வி. சுப்பிரமணிய சர்மா, மு. கனகசபாபதிக்குருக்கள், வே. சிங்காரவேல் ஐயர், க. செந்தில்நாத சர்மா, ச. சிவசுப்பிரமணியக்குருக்கள், பா. நகுலேஸ்வரக்குருக்கள், சோ. நடராசகுருக்கள், இ. சுப்பிரமணியக்குருக்கள், கு. மங்களேஸ்வர ஐயர், கை. திருஞானசம்பந்த குருக்கள்.

யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு

தி. சங்கர்ராஜகுருக்கள், தி. பாலசுப்பிரமணியக்குருக்கள்,சி. யோகேஸ்வரக்குருக்கள்,உ. கிருபானந்தக்குருக்கள்,வ. இராஜேஸ்வரக்குருக்கள்,பா. முரளிதரக்குருக்கள் ச. சிவசாமிக்குருக்கள், இ. பிரணதாக்திஸ்ஹரக் குருக்கள்,நா. முத்துச்சாமிக் குருக்கள்,கி. வைத்தீஸ்வர சர்மா;

உடுவில் பிரதேச செயலக பிரிவு

வா. சர்வேஸ்வர சர்மா, நீ. மணியக்குருக்கள், வா. குமாரசாமி சர்மா, பரமசிவ குருக்கள்,க. சிவகடாட்சக்குருக்கள்,நா. மகாதேவசர்மா,ந. உருத்திரமூர்த்தி,வை. சோமஸ்கந்தக் குருக்கள்,தா. அரிகரசுப்பிரமணியஐயர்,ச. வரதராசக் குருக்கள்.

உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ள இந்து அனாதைச் சிறுவர்களின் பெயர்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு,

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவு

இ. சுகந்தினி, க. சிறிமுருகன், செ. செல்வக்குமார், செ. மதுரா, ந. தனராஜன், க. உஷாநந்தினி, அ.டிலான், ச. அஜந்தா, தெ. ரேகா, இ. லசிதரன், இ. தனுசியா, சு. றஜீபா, ம. மாலினி, இ. ரதி. செ. பிரசாந், சிறி மோகன விஜிதா, நா. சசிரூபன், ஜோ. அமலதாஸ், உதயச் சந்திரன், ச. றம்மியா,

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு

த. பார்த்தீபன், சி. கஜேந்திரன், சி. தர்சனா. வே. பிரதீபன், சி. தர்ஷிகன், வே. பிரதீபா,வி. விபூஷனா, இ. கிரிஜனா, இ. ஜிவிதராஜ், சி. சிவநாதன்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவு

சி.லாவன்யா, சி.தனுஷா, சா. அஜீத்பிராங்கின், அ, நிரோஜினி, கே.பாமினி, தே.அவிஷா, தே.தவிஷா, மு.சுஜீவன்,கிருசாந், ப.துஸ்யந்தன்,

நல்லூர் பிரதேச செயலக பிரிவு

ந.தேனுப்பிரியா,நி. நிரோஜன், க.கஜன், இ.நிஷாந்தினி, எஸ்.மைதிலி,அ.சுலோஜினி, கு. துவாரகா, செல்லின். லோகேஸ்வரன், ஐ.அரிகரன், எஸ்.சரிதா, பு.சிந்துஜா, ம.அனுஷா,.

க. கதிர்காமநாதன், ந. ரதிக்குமார்,பா. சைலஜா அ. பிரசாத், சிறி. தவராணி, கு. மதுசுதன், இ. அசோக்குமார், மயில்வாகனம், சோதிலிங்கம், த. சுதர்சன், மு. மனோப்பிரியா, த.றோசான்,அசோக்குமார், மோ. சந்திரிக்கா, சு. செல்வராணி, சு. கோபிராஜ்.

சே.தனுசன்,வி.வினோதா,

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு

யோ. மகேந்திரன், யோ.ஜசோதா, க.யசிதரன், சு. யசிந்தா, கி. சாத்திஜன், இ. றபூக்கன், இ. சங்கநிதி, பா.கஜீபன், பா. பால்ராஜ், உ. சுஜீவா, உ. மயூரா, இ.நந்தினி, இ.தாட்சாயினி, ச.கிருபாலினி, பா.தனுசிகா, இ. நந்தினி, அ.செந்தூரன், பு.ரவீந்திரன்,பு.ராஜ்குமார், இ.சாலினி.

உடுவில் பிரதேச செயலகபிரிவு

க.கேதரஞ்சினி க. சுமதி, இ. கஸ்தூரி,,மு. லலிதாவும்பிகை, உ. தாட்சாயினி, யோ. பிரியதர்சினி, வி.விக்கினேஸ்வரி, ம.சசிதா, கெ.லசிந்தா,செ.சிவதர்சினி, கு. சுகிந்தா, சி. ஆஷா, சு. அஜித்தா, ச. சசிக்கா, சு. ஜெயவதனி.

வ.புவனேந்திரன், உ.சசிதரன்,யோ.பிரபா,கு.கௌசிகன்,ம.மயூரன்,ச.புஸ்பராஜ், செ.சசிராஜ், போ.அமுதகுமார், க.அம்பிகா, ச.லிங்கேஸ்வரி, மயூரன், கங்கா, கதீஸ்வரன்,சந்தியா,அனுசா,

## கரும்புலி மில்லரின்சிலை கிணற்றில் இருந்து மீட்பு

(மந்திகை)

இராணுவத்தினரின் கைகளில் சிக்காதுகடந்த ஆறுவருடங்களாக கிணற்றில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் முதல் கரும்புலியான கரும்புலி கப்டன் மில்லரின் ஆறு அடி உயரமான உருவச் சிலை கடந்த திங்களன்று அப்பகுதி பிரமுகர்களால் மீட்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு இராணுவத்தினர்யாழ்.குடாநாட்டை கைப்பற்றிய பின் குடாநாட்டிலிருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் உழவுஇயந்திரம் புல்டோசர்கள் மூலம் அழிக்கப்பட்டது.

அவ்வேளை, நெல்லியடிமத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த மில்லர் நினைவாலயத்தில் கருங்கற்களினால் செதுக்கப்பட்டிருந்த 6 அடிஉயரமான உருவச்சிலையை அப்பகுதி மக்கள் பாதுகாக்கும்வகையில் ஒதுக்குப்புறமான கிணறு ஒன்றில் போட்டனர்.

தற்போதுபுரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் புலிகள் மீண்டும் யாழ்.குடாநாடு வந்துள்ள நிலையில் எதிர்வரும் 5ஆம்திகதி அனுட்டிக்கப்படவுள்ள கரும்புலிகள் தினத்தையொட்டி இவ் உருவச்சிலை மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சிலை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. (உ-23)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலா அ தவர்.

குறள்

# வலம்புரி

## பிரிட்டிஷ் ஆதிக்கம்

யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாகப் பழுதடைந்திருந்த மணிக்கூட்டுக் கோபுரம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் மணிக்கூட்டின் பாவனை மக்களிடையே இல்லாததாலும் வேல்ஸ் இளவரசரின் வருகையை பிரிட்டிஷ் தனது குடியேற்ற நாடான இலங்கையில் ஆவணப்படுத்தும் முகமாகவும் இம் மணிக்கூட்டுக் கோபுரம் தேவைப்பாடுடையதாக இருந்திருக்கமுடியும். எனினும் சமகாலத்தில் திருத்தியமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரமானது நேரம் பார்ப்பதற்கான ஓர் தேவையை நிறைவேற்றுவதாக இருக்காதென்பது சர்வ நிச்சயம். இன்று எங்கும் மணிக்கூட்டுமயம். சாதாரணமாக தொலைத் தொடர்பு நிலையங்களில் ஒவ்வொரு நாட்டு நேரங்களையும் அறியக் கூடிய வகையில் ஒவ்வொரு மணிக்கூடுகள் பொருத்தப்பட்டுள்ளன. அந்தளவில் நேரப்பார்வையில் திருத்தியமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரம் பயனுடையதாக் அமையாது.


ஆக இலங்கை ஒரு காலத்தில் குடியேற்ற நாடாக இருந்தது என்பதற்கான அடையாளம் ஒன்று யாழ்ப்பாணத்திலும் உண்டு என்ற வகையில் கோபுரம் திருத்தப்பட்டதன் பயன் நினைவு கூரப்படலாம்.

இதில் சிரிப்பு என்னவெனில் பிரிட்டிஷாரின் ஆட்சியில் இலங்கை அடிமைப்பட்டுக்கிடந்து விடிவுபெற்ற போதிலும் பிரித்தானியரின் குடியேற்றத்தை நினைவுபடுத்தும் மணிக்கூட்டுக் கோபுரம் மீண்டும் பிரித்தானியரிடமே உதவி பெற்றுத் திருத்தப்பட்டுள்ளது எனில் - அதனை பிரிட்டிஷ் தூதுவரே திறந்து வைத்துள்ளார் எனில் இலங்கை சுதந்திரமடைந்ததை விட பிரித்தானியரின் ஆட்சியிலேயே இருந்திருக்கலாம் போல் தெரிகிறது.

பிரித்தானியரின் ஆட்சியில் பிரித்தானியத் தூதுவர் மணிக்கூட்டுகோபுரத்தைத் திறந்து வைத்திருந்தால் அது தகும். ஆனால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான-தமிழ் மக்களின் உரிமை விடயத்தில் பொறுப்பற்ற விதத்தில் அறிக்கைகளை விடும் பிரிட்டிஷ் தூதுவர் மூலம் மணிக்கூட்டுக் கோபுரம் திறந்து வைக்கப்பட்டது விரும்பத்தக்கதல்ல.

# தேவாரகாலத் திருக்கேதீச்சரத்தின் சிறப்பு

# சைவமக்களின் உள்ளங்களை உவக்கவைக்கும்



திருக்கேதீச்சரத்து இறைவன் புகழைப்பாடிப் பரவியோர் இருவர். ஒருவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த மூர்த்திநாயனார். இன்னொருவர் ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், கேதீச்சரத்து இறைவன் புகழைப் பாடியஅவர்கள் மாதோட்டத்தின் மாண்பையும், பாலாவியின்பண்பையும் பாராட்டிப் பாடினார்.

திருக்கேதீச்சரத்து இறைவனின் பெருமையை நாவுக்கரசர் 'பூதியணி பொன்னிறத்தார் பூணு நூலார் பொங்கரவர் சங்கரர், வெண் குழையோர் காதர் கேதீச்சரம் மேவினார்': என்று திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகப் பெருமான் 'குயிற்பத்திலும்' திருவார்த்தையிலும் இலங்கையில் மண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் என்றுபாடியுள்ளது திருக்கேதீச்சரமே என்று எல்லோராலும் கருதப்படுகிறது. கேது வழிபட்டமையால் 'கேதீச்சரம்' என்ற பெயரை இத்தலம் பெற்றது எனக் கூறுவர்'.

### நோய்தீர்க்கும் பெருமான்

கேதீச்சரப் பெருமானை வழிபடுவோர் வினைகளும், நோய்களும் தீரப்பெற்றுப் பெருவாழ்வு பெறுவர். இந்த உண்மையினைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரப் பதிகத்தில் பல விடங்களில் குறிப்பிட்டுள்ளார், 'கேடில்லாத கேதீச்சரம் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே' என்றும், 'அண்ணல் கேதீச்சரம் அடைவார்க்கு அருவினை அடையாவே' என்றும் 'முடிகள் சாய்ந்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினை போமே' என்றும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்துள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கேதீச்சரத்தான் 'அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்' என்றும் 'ஊனத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருள்வான்' என்றும் 'குழையாத் தமிழ்' சாற்றியுள்ளார்.

### மாதோட்டவளம்

தேவாரகாலத்தில் மாதோட்டத்தை ஓங்கி வளர்ந்த பொழில்கள் அழகு செய்தன. அங்கே மாமரங்களும், கமுகுகளும், வாழைகளும், நெருங்கி

**ஆ. கந்தையா**
**எம். ஏ-**

வளர்ந்து காட்சி கொடுத்தன. மாமரங்களில் தொங்கிய கனிகளையும், கதலியில் பழுத்திருந்த பழங்களையும் மந்திகள் உண்டுகளித்தன, சோலைகளிலுள்ள நறுமலர்களில் வண்டுகள் வதிந்தன, இவ்வாறு நீர்வளமும், நிலவளமும் ஒருங்கேயமைந்த மாதோட்டத்தை 'கனைகடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம்' என்றும், மாவும், பூகமும், கதலியும் நெருங்குமாதோட்டநன்னகர் என்றும் 'வாழைஅம் பொழில் மந்திகள் கணிப்புற மருவிய மாதோட்டம்' என்றும் திருஞான சம்பந்த சுவாமிகள் பாடியுள்ளார். இவ்வடிகள் தம் அகக் கண்முன்னே அழகிய பொழிலையும், அங்கே கனியுண்டு களிக்கும் மந்திகளையும், காண்பிக்கின்றன வல்லவா? மாதோட்டத்திலுள்ள மாஞ்சோலையின் மாண்பினை மாவின் கனி தூங்கும் பொழில்மாதோட்ட நன்னகர்' என்று தேவாரத்தில் சொற்களால் தீட்டுகின்றார் சுந்தரர்.

### தேனுண்ணும் வண்டுகள்

மாதோட்டத்துப் பூஞ்சோலையில் புதுமலர்களில் வண்டுகள் பல வதிந்தன. அவை இனிய தேனைவிரும்பி உண்டு மதிமயங்கி ரீங்காரஞ் செய்து பண்கள் பாடித் திரிந்தன.

## வெள்ளி நற்சிந்தனை

அவ்வண்டுகளின் இசை யாழின் இசையைப் போன்று சுந்தரர் செவிகளில் ஒலித்தது. தாம் கண்டதையும், கேட்டதையும் இறையார் பொழில்வண்டுயாழ். செய்யும் கேதீச்சரத்தானே' என்றும் மட்டுண்டு வண்டாடும்பொழில்மாதோட்ட நன்னகர்என்றும் ,வரியசிறைவண்டு யாழ். செய்யும் மாதோட்ட நன்னகர்' என்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிப்பரவியுள்ளார்.

### அழகிய காட்சி

மாதோட்ட நன்னகரிலுள்ள சோலையொன்றின் அழகான காட்சி ஒன்றினை ஞானக் கண்ணால் கண்டு வியக்கின்றார் சம்பந்தர். மாமலர்ப் பொழிலிடையே மயிலொன்றைக் கண்டார். அந்தமயில் அழகாக ஆடுவதையும் பார்த்தார். அந்கமயிலின் நடனமும் வண்டுகளின் இன்னிசைக்கு இயைய அமைந்து இருந்ததையும் நோக்கினார். அக்காட்சி சம்பந்தப் பெருமானின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. இக்கவின் காட்சியைத் தமது தேவாரத்தில், வண்டு பண் செய மாமலர் பொழிலிடை மஞ்ஞை நடமிடும் என்று அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். இவ்வடிபண்டுநால்வருக்கு அறமுரைத்தருளி' என்னும் தேவாரத்தில் மூன்றாவது அடியாக அமைந்துள்ளது.

### தெங்கம் பொழில்

தேவாரகாலத்தில்மாதோட்ட நன்னகரில்தென்னைகள் நிரை நிரையாகச்செழித்துவளர்ந்து காட்சி கொடுத்தன. அன்று திருக்கேதீச்சரத்தைச் சூழ்ந்து தென்னஞ்சோலைகள் திகழ்ந்தன என்பதை 'தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச்செய்த தேவாரம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஏன்? இன்னும் அங்கு தென்னைகள் செழித்து வளர்கின்றனவே! கடற்கரையை அடுத்துள்ள நிலமாகையாலும். தென்னை செழித்து வளர உகந்த நிலமாக மாதோட்டத்தின் தென்பாகம் இருப்பதாலும், தேவாரகாலத்தில் தென்னஞ்சோலைதிருக்கேதீச்சரத்தைச் சூழ்ந்திருந்தது என்பது தெற்றெனத் தெரிகின்றது.

### பொன் கொழிக்கும் பூமி

தேவாரகாலத்தில்மாதோட்ட நன்நகர் திருவுறையும் பொன்னகராகத் திகழ்ந்தது. முத்துக்களும் வலம்புரிச் சங்குகளும் விலையுயர்ந்த மணிகளும் அங்கு குவிந்துகிடந்தன மாதோட்ட நகரின் செல்வப் பெருக்கினைத் திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் ''பொன்னிலங்கிய முத்து மாமணிகளும் பொருந்திய மாதோட்டம்' என்றுபாடியுள்ளார். இன்னும் மாதோட்டத்தின் அயலிலுள்ள முழங்குதிரைப் பொருங்கடலில் வெண்சங்குகள் மலிந்து கிடந்தன என்பதை ''வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகர்'' என்னும்சுந்தர மூர்த்தி சுவாமிகளின் கூற்று மேலும் வலியுறுத்துகின்றது.

### சிறந்ததுறைமுகம்

தேவாரகாலத்தில் மாதோட்டம் சிறந்த துறைமுகமாகவும் திகழ்ந்தது. அங்கேசங்குகளும், முத்துக்களும், மணிகளும் மட்டுமின்றி, பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியானபண்டங்களும் குவிந்து கிடந்தன. வாணிபத்தில்சிறப்புற்று விளங்கிய மாதோட்ட நன்னகரில் வாழ்ந்தமக்கள் எவ்வித குறையுமின்றிப் பல செல்வங்களும் பெற்று இன்புற்றிருந்தனர். அவர்களின் இன்பவாழ்விற்கு எறி திரைக் கடலும் உறுதுணையாய் அமைந்து விளங்கிற்று. இதனாலேயே ''வையம்மலிகின்ற கடல் மாதோட்டநன்னகர்'' என்று தேவாரம் அந்நகரினைப் புகழ்ந்து பேசுகின்றது. மேலும்பல பண்டங்களை ஏற்றிய நாவாய்கள் அத்துறைமுகத்துக்கு வருவதும்போவதுமாயிருந்தன. பல நாவாய்கள் துறைமுகத்தில் காணப்பட்டன என்பதை '' வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்'' என்னும்தேவார அடி இனிது புலப்படுத்தி நிற்கின்றது. எனவே மாதோட்டம் அன்று மிகவும் பெரியதொரு துறைமுகமாக விளங்கிற்றென்பதும், அதனையடுத்திருந்த கடல்கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக இருந்ததென்பதும் தெளிவாகின்றது.

### பாலாவி

தேவார காலத்தில் மாதோட்டம் எழில் பெற்றுத் திகழ்வதற்கு அதன் நடுவண் இருந்த பாலாவியும் ஒருகாரணமாகும். மாதோட்டத்தில் வாழ்ந்தமக்களுக்குப் பலவழிகளில் பாலாவி பயன்பட்டது. பாலாவியிற்பாய்ந்து சென்றபுற நீரினை மறித்து இடையிடையே தேக்கிப் பல மைல்களுக்குப் பரந்து கிடந்த செந்நெல்வயல்களுக்கு மாதோட்டமக்கள் பாய்ச்சிப் பயிரிட்டனர். பாலாவித் தண்ணீரால் பசுமை பெற்று விளங்கிய வயல் நிலங்கள் மாதோட்ட நகரின் வளத்தை மேம்படுத்தின, தேவாரகாலத்தில் பாலாவி மிகவும் ஆழமுடையதாய், பரந்து நீண்ட ஆற்றுப் படுக்கையினைக் கொண்டதாய் விளங்குகின்றது. கடலிடைக்கலந்த பாலாவியின் பெருக்கினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பரிய திரை எறிய வரு பாலாவியின் கரைமேல்' என்று தமது தேவாரத்தில் தீட்டுகின்றார். பாலாவியில் தீர்த்தமாடுவோர் பாவமும், பிணியும் நீங்கி, முத்தியின்பத்தைப் பெறுவர் என்று தக்ஷண கைலாச மான்மியம் என்னும் நூல் கூறுகின்றது. 'பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்' என்னும் சுந்தரமூர்த்தி நாயனாரின் கூற்று இதனை மேலும் வலியுறுத்துகின்றது.

### மணவாளன்

மாதோட்டத்தின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நித்திய மணவாளனாக விளங்குகின்றான் என்று தேவாரம் புகழ்கின்றது. 'மத்தம்மத யானையுரி போர்த்த மணவாளன் எனப் போற்றிப் பாடுகின்றார் சுந்தர,

(2-ம் பக்கம் பார்க்க)

---

## தினசரி தியானம்

### தோட்டக்காரன்

எழுவகைத் தோற்றத்
திருந்துவிளை யாடினதைப்
பழுதறவே பாராமற்
பயனிழந்தேன் பூரணமே.

- பட்டினத்தார்

சர்வேசுவரா நீ எனக்குச் சொந்தமாயிருந்தும் நான் ஒன்றும் இல்லாதவன் போல் வருந்துவது எதற்காக?

எந்தத் தோட்டக்காரனாவது ஒரே வகைச்செடியை உண்டுபண்ணுதலில் மகிழ்ச்சியடைவதில்லை. விதவிதமான செடிகள், பல நிறமுடைய பூக்கள், வேறு வேறு சுவையுள்ள கிழங்கு, காய்கனி வகைகள் உற்பத்தியாக்குதலில் அவனுக்குப் பரமதிருப்தி. சர்வேசுவரன் ஒரு நல்ல தோட்டக்காரன். எத்தனை விதப் பாங்குடைய உயிர் வகைகளை, சிறப்பாக மக்களை இவன் படைத்திருக்கிறான். இவையனைத்துக்கும் அவனுடைய தோட்டமாகிய பிரபஞ்சத்தில் இடமுண்டு.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts.

### FACULTY OF AGRICULTURE

1. Professor in Agronomy/ Agricultural Economics/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Agricultural Engineering/ Animal Science.
2. Assistant Lecturer (on Contract)/ Demonstrator (on Contract)/ in Agronomy/ Agricultural Biology/ Agricultural Chemistry/ Animal Science/ Agricultural Economics/ Agricultural Engineering.

### FACULTY OF ARTS

1. Professor in Tamil/ Education/ Linguistics/ Economics/ Fine Arts.
2. Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Carnatic Music (Vocal/ Veena/ Mirudangam)/ Geography*/ Economics/ Psycology/ Tamil.
3. Assistant Lecturer (on Contract) in Anthropology/ Arts and Design/ Christian Civilization/ Dance (Bhara thanatyam )/ Dance (Vocal)/ Dance (Mirudangam)/ Drama and Theatre Arts/ Economics/ Fine Arts/ Geography/ Hindu Civilization/ Hindu Philosophy/ Philo sophy/ Music - Carnatic (Vocal/ Veena/ Violin/ Mirudangam)/ Political Science/ Psychology/ Sociology/ Tamil/ Home Economics/ English Literature/ Mass Media/ Journalism.
4. Tutor (on Contract) in Geography/ History/ Archaeology.
5. Instructor (on Contract) in Art and Design/ Dance/ Music.
6. Instructor in English Grade II

* Preference will be given those who specialised in Geographical Information System or Planning

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

1. Professor in Business Administration/ Commerce
2. Assistant Lecturer (on Contract) in Business Administration/ Commerce
3. Visiting Lecturer in Law ( Civil, Industrial, Commercial)

### FACULTY OF MEDICINE

Demonstrator (on Contract) in Anatomy/Bio Chemistry/ Physiology/ Community Medicine/Pathology/ Microbiology/ Paracitology /Forensic Medicine/ Medicine/Pharmacology/Psychiatry/Paediatrics/ Obstetrics & Gynaecology/ Surgery.

### FACULTY OF ENGINEERING

1. Professor in Engineering (Electronic/Information Technology)

### FACULTY OF SCIENCE

1. Professor in Statistics/ Organic Chemistry/ Physical Chemistry/Botany/ MarineBiology/ Physics/ Zoology/ Computer Science/ Mathematics
2. Senior Lecturer GradeI/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Botany/ Chemistry (Physical and Inorganic)/ Physics* (Electronics Computational Physics, Nuclear Physics, Particle Physics, Geo- Physics)/Zoology/ Computer Science/ Mathematics and Statistics

*Applications from Graduates in Electronics Engineering or Computer Engineering could also be entertained for the Post of Lecturer (Prob) in Physics
3. Assistant Lecturer (on Contract) /Demonstrator (on Contract ) in Botany/ Chemistry/ Physics / Zoology
4. Assistant Lecturer (on Contract) Instructor (on Contract) in Computer science/Mathematics and Statistics
5. Instructpr (on Contract) in Computer Unit
6. Assistant Net Work Manager
7. Instructor in Computer Technology Grade II

### PHYSICAL EDUCATION

Assistant Lecturer (on Contract)

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs.25,500 - 8x550 - 29,900/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.21,500 - 8x475 - 25,300/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.18,325 - 5x475 - 20,700/-p.m |
| Lecturer (Probationary) | Rs.11,820 - 10x375 - 15,570/-p.m |
| Assistant Lecturer (on Contract) | Rs.10,800/- p.m Fixed |
| Tutor (on Contract) | Rs.9000/-p.m. Fixed |
| Instructor/ Demonstrator (on Contract) | Rs.9000/- p.m. Fixed |
| Assistant Net Work Manager/ Instructor in Computer Technology | Rs. 10,800 - 3x300 - 11,700(EB) 12,900 - 13x375 - 17,775/- p.m |
| Instructor in English Grade II | Rs 9,825 - 10x200 - 11,825/- |
| Visiting Lecturer | Rs.300 per Hour |

Application forms and other details may be obatained from the office of the Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri lanka, either in person or by sending a money order for Rs. 20/- per form. Those who wish to obtian application forms by post are requested to send a money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23 x 30 cm in size

Appointment on contract basis would also be considered for the posts of Professor and senior Lecturer

The closing dates of applications are

i. Professor -07.10.2002
ii. Senior Lecturer Gr.I, Gr. II: Faculty of Science - 07.10.2002
iii. Senior Lecturer Gr.I, Gr. II: other Faculties - 26.07.2002
iv. All other posts - 26.07.2002

Applicants from the University System/ Government Departments/ corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions

Applications received after the closing date will be rejected without intimation

**Registrar,**
University of Jaffna,
Sri lanka,

18.06.2002

[C/4507]

## கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் பிரித்தானிய நிறுவனம்

(கொழும்பு)

வட பகுதியில் நிலக்கண்ணி வெடிகள் மற்றும் பொறிவெடி மிதிவெடிகளை அகற்றும் பணியில் பிரித்தானிய ஹலோ கிறஸ்ற் எனும் நிறுவனம் ஈடுபடவுள்ளது.

வட பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் இவ் வெடிபொருட்களை அகற்றும் பணியில் சுமார் நானூறு முதல் ஐந்நூறு வரையான நிபுணர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் இப் பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என றும் 'ஹலோ கிறஸ்ற் நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ)

## தமிழக அகதிகள் அழைக்கப்படுவர்

(கொழம்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற இனயுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கை அகதிகளை தாயகத்திற்குத் திருப்பி அழைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற காக புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் எஸ். சுபைர்தீன் இந்தியா சென்றுள்ளார்.

இந்தியா சென்றுள்ள அவர் தமிழக அரசின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். (ம)


RAW

ஒரு

மிக விரைவில் விற்பனைக்கு வருகின்றது

(C/4436)






## துயர் பகிர்கின்றோம்

### திருமதி A. R. வினாசித்தம்பி இராசம்மா

யாழ்ப்பாணம் 303, ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு, முகவர் தபால் நிலையம், *Coco - Cola* விநியோகம் ஆகியவற்றின் உரிமையாளர் தியாகராஜா - தேவராஜன் அவர்களின் பாசமிகு மாமியார் **A.R. வினாசித்தம்பி - இராசம்மா** அவர்கள் 18.06.2002 அன்று இறைபதம் அடைய இவ்வுலகை நீத்த செய்தி கேட்டு மனம் அழுந்தும் இவ்வேளையில், அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது அனுதாபத்தை தெரிவித்து அன்னாரின் ஆத்மா இறைபதம் சேர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஸ்ரீ முருகன்
பணியாளர்கள்

(C/4511)



## பனை தறித்தல் தண்டனைக்குரிய குற்றம்!

எமது நாட்டின் இயற்கை வளமான பனை வளத்தை அழிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். இயற்கை தந்த அரும்பெரும் செல்வமான இந்த வளத்தை பாதுகாப்பது மக்கள் ஒவ்வொரு வருடைய தலையாய கடமையாகும்.

452ஆம் அத்தியாயமான மரங்களைத் தறித்தல் (கட்டுப்பாட்டு திருத்த) சட்டத்தின் 2ம் பிரிவின் கீழ் பனையை தறித்தல் தண்டனைக் குரிய குற்றம் என 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி வெளியான அரச வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள் ளது.

**ஏழைக்கு வாழ்வளிக்கும் பனையை வெட்டினால் பிணையும் கிடையாது**

❁ பனம் விதைகளை நாட்டி அழிந்துபோன வளத்தை ஈடுசெய்வோமாக.

பனை அபிவிருத்திச் சபை

பனை அபிவிருத்திச் சபை
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
njhiyNgrp - 2034

[C/4509]



## மங்களகரமான திறப்பு விழா

SUPER SHOW VIDEO

கொழும்பில் சுப்பஷோ வீடியோ ஸ்ருடியோ & கலர் லாப்



**(206, ஜம்பட்டா வீதி கொட்டாஞ்சேனை கொழும்பு)**

வீடியோ புகைப்படத்துறையில் இற்றைக்கு 15 வருடங்களுக்கு மேலாக யாழ் நகரில் சேவை புரிந்து வரும் "சுப்பஷோ" இப்பொழுது கொழும்பு நகர் கொட்டாஞ்சேனையில் தனது சேவையை இன்று (21.06.2002) முதல் ஆரம்பிக்கிறது என்பதனை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் புகைப்படச் சுருள்களை டிஜிற்றல் முறையில் உடனுக்குடன் பிரதியாக்கம் செய்து பெற்றிடவும் உங்களுக்குத் தேவையான சகல அளவுகளிலும் புகைப்படம் எடுத்துப் பெற்றிடவும் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளை வீடியோ, புகைப்படம் பிடித்திடவும் நாட வேண்டிய இடம் ;

**சுப்பஷோ வீடியோ ஸ்ரூடியோ & கலர் லாப்**

206, ஜம்பட்டா வீதி
கொட்டாஞ்சேனை
கொழும்பு
T.P- 074 - 618370

SUPER SHOW VIDEO
@ HOT - MAIL . COM

149, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
T . P- 021 - 2082

[C/4508]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.